தலைவாசல் ஊராட்சி ஒன்றியம் காமக்காபாளையம் கிராம ஊராட்சி

கிராம ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : A. மாதேஸ்வரன்.

ந.க.எண்.: 133 நாள்: 29.01.2024

பொருள்::புதிய மனைப்பிரிவு- தலைவாசல் ஊராட்சி ஒன்றியம், காமக்காபாளையம் ஊராட்சி கிராம புல எண்.11/2B1, 11/2A1, 1 ஏக்கர் 75.7 செண்ட் பரப்பளவு கொண்ட இடத்தில் குடியிருப்புக்கான மனைப்பிரிவு அமைத்திட நில பயன் மாற்றம் சான்றுக்கு 3% சந்தை மதிப்பு தொகை செலுத்தப்பட்டது. மனை ஒன்றுக்கு கூராய்வு கட்டணம் ரூபாய் 1000 வீதம் பெறப்பட்டது. மனைப்பிரிவுக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கி உத்தரவிடுதல் தொடர்பாக.

பார்வை: 1. கவிதா க/பெ சுந்தரம் 2. மாதேஸ்வரி க/பெ. முத்துசாமி என்பவரின் மனு நாள்:

பார்வை: 2. உதவி இயக்குநர் நகர் ஊரமைப்பு துறை சேலம் மண்டலம் அவர்களின் கடித எண். SLM/7VYOYOGG/17933/2023
LAY out No.29/2024.

பார்வை: 3. பதிவுத்துறை ஆவணங்கள் ஒப்படைப்பு நாள்:05.01.2024.

உத்தரவு :

தலைவாசல் ஊராட்சி ஒன்றியம், காமக்காபாளையம் ஊராட்சி கிராம புல எண். 11/2B1, 11/2A1, 1 ஏக்கர் 75.7 செண்ட் பரப்பளவு கொண்ட இடத்தில் குடியிருப்புக்கான மனைப்பிரிவு அமைத்திட மனை பிரிவு அங்கீகாரம் வழங்குமாறு பார்வை 1–ல் காணும் மனுவில் மனுதாரரால் கோரப்பட்டுள்ளது. பார்வை 2–ல் காணும் உதவி இயக்குநர் ஊரமைப்புத்துறை சேலம் அவர்களின் கடிதத்தில் குடியிருப்புக்கான மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகள் மற்றும் பொது பயன்பாட்டிற்கான இடம் ஆகியவற்றை தனி நபரிடம் இருந்து ஊராட்சி மன்ற தலைவர் காமக்காபாளையம் என்ற பெயருக்கு தானமாக பெற்றுக் கொண்டு நிபந்தனைகளுக்கு உட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் பார்வை 3–ல் காணும் 05.01.2024 ஆம் நாளில் சாலைகள் மற்றும் பொது பயன்பாட்டிற்கான இடத்தினை பதிவு துறையின் மூலம் பதிவு செய்து முறையாக ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும் பார்வை 2–ல் காணும் கடிதத்தில் குடியிருப்பக்கான மனைப்பிரிவு நில பயன் மாற்றம் சான்றிற்கு சந்தை மதிப்பு தொகையில் 3% சதவீதம் தொகையை உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. பார்வை 3 ல் காணும் பதிவுத்துறை கடிதத்தில் 1 ஏக்கர் 75.7 சென்ட் பரப்பளவிற்கு ரூ. 37214 3% மதிப்பு ரூபாய். முப்பத்துஏழாயிரத்துஇருநூற்றுபதினான்குமட்டும் 06.02.2024 அன்று மனுதாரரால் உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது. மனை ஒன்றுக்கு கூராய்வு கட்டணம் ரூபாய். 1000 வீதம் பெறப்பட்டது. எனவே மேற்படி புல எண்களில் அமையவிருக்கும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கி இதன் வழி உத்தரவிடப்பட்டுள்ளது.

தலைவர்,

காமக்காபாளையம் ஊராட்சி.

தலைவர்
காமக்காபாளையம் ஊராட்சி

பெறுநர்,

1. கவிதா க/பெ சுந்தரம் , 113, வேதநாயகபுரம், காமக்காபாளையம் அஞ்சல், தலைவாசல் வட்டம், சேலம் மாவட்டம்.
2. மாதேஸ்வரி க/பெ முத்துசாமி, 62, வேதநாயகபுரம், காமக்காபாளையம் அஞ்சல், தலைவாசல் வட்டம், சேலம் மாவட்டம்.